**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 05/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சசிகுமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.03.2023.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடச்சி**

1. என்னுடைய புகாரில் காசோலை எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். நான் வழக்கிற்காக மேற்கண்டவாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. புகாரில் காசோலை தந்ததாக சொல்லப்படும் தேதியில் எத்தனை மாதத்திற்கான வட்டி எவ்வளவு தொகை என்பது காணப்படவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டுள்ளேன். நான் வழக்கிற்காக மேற்கண்டவாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. 28.9.2018 ம் தேதியிட்ட காசோயை 9.10.2018 ம் தேதி தாமதமாக வசூலுக்கு நான் தாக்கல் செய்ததற்கான காரணத்தை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் புகாரில் குறிப்பிடவில்லை. எதிரியின் வேண்டுகோளின்படி தான் மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன்.

2. ரூ.15,00,000/- எதிரியிடம் இருந்து எனக்கு வரவேண்டியதற்கு எதிரி மீது நான் சிவில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிவில் வழக்கு தாக்கல் செய்யாமல் இருப்பதற்கு குறிப்பிட்ட

காரணம் உள்ளதா என்றால் இல்லை. உண்மையிலேயே எதிரி பணம் எதுவும் வாங்காததாலும் நானும் அவருக்கு கடன் கொடுக்காததால் தான் சிவில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தவறு.

3. 16.10.2018 ம் தேதிக்கு பின்னிட்டு எதிரியை சந்தித்து வாய்மொழியாக பணம் கேட்டதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் காசோலை பணமின்றி திரும்பியதால் எதிரியிடம் கேட்டுவிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்தேன். அதன்பின்னிட்டு தான் 24.10.2018 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் எதிரியிடம் பணம் கேட்டு தராத காரணத்தால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பை படித்து பார்த்தேனா என்றால் அவர் அனுப்பியபோது படித்து பார்த்தேன். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்புக்கு மறு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எதிரி என் மீது அதிக கந்துவட்டி கேட்பதாகவும் காசோலைகளை தவறாக பயன்படுத்திவிடுவேன் என்று நான் மிரட்டியதாக கூறி உடுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

4. அந்த புகாருக்கு CSR NO. 766/18 தேதி 05.10.2016 அன்று உடுமலை காவல் நிலையத்தில் தரப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேதி ஞாபகம் இல்லை. இந்த வழக்கு காசோலை 9.10.2018 ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வட்டி தொகை ரொக்கமாக செலுத்தப்பட்டதா அல்லது எவ்வாறு செலுத்தப்பட்டது என்ற விவரம் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே எதிரி இடம் இருந்து நான் காசோலை பெற்றுக்கொண்டு எதிரி கொடுத்த வட்டியை பெற்றதாக கூறிய சம்பவம் நடைபெறாத காரணத்தினால் தான் மேற்கண்ட விவரத்தை நான் அறிவிப்பிலும் புகாரிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவர் என்பதால் வங்கி பரிவர்த்தணை குறித்து எனக்கு தெரியும் என்றால் ஓரளவுக்கு தெரியும்.

5. ரூ.15,00,000/- பெரிய தொகை என்பதால் வங்கி பரிவர்த்தணை மூலம் பரிமாற்றம் செய்ய வேண்டும் என்று சொன்னால் அது குறித்து அப்போது சிந்திக்கவில்லை. நான் சொன்னபடி எதிரிக்கும் எனக்கும் எந்த பரிவர்த்தனையும் நடக்காததால் தான் எதிரி ரொக்கமாக பணம் பெற்றுக்கொண்டதாக குறிப்பிடுகிறேன் என்றால் உண்மை அல்ல. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் வியாபார தேவைக்கு எதிரி பணம் கேட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். புகாரில் அவசர செலவுக்கு பணம் கொடுத்தாக காணப்படுகிறது என்றால் சரிதான். என்னுடைய

வழக்கறிஞர் அறிவிப்பில் பணத்தை எவ்வளவு நாளில் எப்படி திருப்பி செலுத்துவது என்ற விவரம் காணப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய புகாரில் வேண்டும்போது பணத்தை திருப்பி செலுத்துவதாக காணப்படுகிறது என்றால் சரிதான்.

6. என்னுடைய முதல் விசாரணையில் ஒரு வருடத்தில் பணத்தை திருப்பி செலுத்துவதாக எதிரி கூறியதாக காணப்படுகிறது என்று சொன்னால் ஞாபகம் இல்லை. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் பிராம்சரி நோட்டு எந்த தேதியில் எழுதி தந்ததாக காணப்படவில்லை 28.09.2018 ம் தேதி எழுதி கொடுத்தாக நான் குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் எத்தனை சதவீத வட்டிக்கு எதிரிக்கு கடன் கொடுத்தாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் எப்போது எதிரி பணம் கேட்டார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன், செப்டம்பர் இரண்டாவது வாரம் பணம் கேட்டதாக குறிப்பிட்டுள்ளேன்.

7. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் வட்டியை மட்டும் செலுத்திவிட்டு அசல் செலுத்த இன்று நாளை என தாமதப்படுத்தினார் என காணப்படுகிறது என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் காசோலையில் யார் கையெழுத்து போட்டார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் என்னென்ன ஆவணங்கள் எதிரி எழுதி தந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் புரோ நோட்டும் காசோலை தான் எழுதி கொடுத்தார் காசோலை கொடுத்துவிட்டு புரோ நோட்டு வாங்கிக் கொண்டார். ஆவணங்கள் எழுதி கொடுத்தாக நான் குறிப்பிடவில்லை என்றால் அது என்னால் சொல்லப்பட்ட முதல் விசாரணை சாட்சியம் அல்ல என்று சொன்னால் ஆவணங்கள் எதுவும் எதிரியிடம் இருந்து வாங்கிவில்லை ஆனால் முதல் விசாரணை சாட்சியத்தில் தவறாக

குறிப்பிடப்பட்டுள்ளது அதில் என் கையெழுத்து உள்ளது.

8. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக தவறுதலாக பிராம்சரி நோட்டு மற்றும் ஆவணங்கள் எதிரி கொடுத்தாக சொல்லிவிட்டேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறு. என்கு எந்தெந்த வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்றால் ICICI, Axis Bank, HDFC and Equitas, யில் வங்கி கணக்கு உள்ளது. **எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.